திரு. திருநாவுக்கரசு இந்த முறையும் சேர்த்து, இரண்டு முறை அவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டிருக்கிற சூழ்நிலையில், பேரவை விதி 120-இன்படி, இந்தக் கூட்டத் தொடர் முடியும்வரை, அவைக்கு வரக் கூடாது; இன்னும் அவர் தொடர்ந்து முறைகேடாகவே நடந்து கொள்வேன் என்கிற முனைப்போடு வந்த காரணத்தினால், இந்தக் காலகட்டத்தில், இந்தப் பேரவை வளாகத்திற்குள்ளேயே அவர் நுழையக் கூடாது என்றும் உத்தரவிடுகிறேன்.

5. கவன ஈர்ப்பு

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, தேக்கம்பட்டி பகுதியிலுள்ள சாயப்பட்டறை கழிவு நீரால் பவானி ஆறும், குடிநீர்த் திட்டங்களும் பாதிப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. செல்வி. எல். சுலோசனா, திரு. வெ. பழனிசாமி, டாக்டர். மு. சீனியம்மாள், திரு. கே. செல்வராஜ், திரு. ஜி. பழனிசாமி ஆகியோருள் ஒருவர், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். செல்வி எல். சுலோசனா.

செல்வி. எல். சுலோசனா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேட்டுப்பாளையம் தொகுதி, பவானி ஆற்றங்கரையோரம் தேக்கம்பட்டி கிராமப் பகுதியில் அமைந்துள்ள சாயப் பட்டறையிலிருந்து (டையிங் பேக்டரி) வெளியேறும் கழிவு நீரினால் ஆறு, குடிநீர்த் திட்டங்கள் பாதிக்கப்படுவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

தற்போது மேட்டுப்பாளையம் பகுதியில் மூன்று சாயத் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. ஒரு தொழிற்சாலை கட்டி முடிக்கப்பட்டு சோதனை ஓட்டம் செய்ய ஆரம்பித்துள்ளது.

1994 நவம்பர் 10] [திரு. ம. சின்னசாமி]

1. திருவாளர்கள் சாரதா டெர்ரி ப்ராடக்ட்ஸ் லிமிடெட், தேக்கம்பட்டி

இத் தொழிற்சாலை மாதம் ஒன்றுக்கு 100 டன்கள் அளவுள்ள டெர்ரி டவல்களைத் தயாரிக்கிறது. தொழிற்சாலை சனவரி 1994 முதல் செயல்பட்டு வருகிறது. இதற்கு 31-3-1994 முடிய வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது. தொழிற்சாலை நாளொன்றுக்கு 300 கி.லி. தொழிற்சாலைக் கழிவுநீரையும், 30 கி.லி. வடிகால் கழிவுநீரையும் வெளியேற்றுகிறது. இக்கழிவுநீரை வெளியேற்ற அத்தொழிற்சாலை வாரிய இசைவிற்கு விண்ணப்பித்துள்ளது. ஆனால், இத்தொழிற்சாலையின் விரிவாக்கத்திற்கு தமிழ்நாடு மாநில சுற்றுச் சூழல் பாதுகாப்புக் கழகத்தின் இசைவு பெறப்பட்ட பின்னரே வாரிய இசைவு வழங்கப்படவேண்டும். இத்தொழிற்சாலை பவானி ஆற்றிலிருந்து 1.5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இத்தொழிற்சாலைக் கழிவுநீரை சுத்திகரிக்க கீழ்க்கண்ட அமைப்புகளைப் பெற்ற சுத்திகரிப்பு நிலையம் அமைந்துள்ளது :

1. சமநிலைப்படுத்தும் தொட்டி
2. மறுபடியும் ஊக்கமூட்டும் தொட்டி
3. காற்றேற்றுத் தொட்டி
4. இரண்டாம் நிலை தெளியவைப்பான்
5. சேறு உலர்த்தும் படுகை

சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை அவர்களது சொந்த நிலமான 11.18 ஹெக்டேர் நிலத்திலேயே பாய்ச்சி வருகின்றனர். சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர், தொழிற்சாலை நிலம் தவிர வேறெங்கும் வெளியேற்றப்படவில்லை.

2. யுனைடெட் ப்ளீச்சர்ஸ் லிமிடெட், சிக்கதாஸம்பாளையம்

இத்தொழிற்சாலை, மாதமொன்றுக்கு 30 டன்கள் நூல் இழைத் துணி வகைகள், 150 டன்கள் தைக்கப்பட்ட துணிகளையும், 350 டன்கள் நெசவு செய்யப்பட்ட துணிகளையும் தயார் செய்து வருகிறது. இத்தொழிற்சாலை ஆகஸ்டு 1953 முதல் இயங்கி வருகிறது. நாளொன்றுக்கு 1800 கி.லி. தொழிற்சாலைக் கழிவுநீரையும், 15 கி.லி. வடிகால் கழிவுநீரையும் வெளியேற்றுகிறது. இத் தொழிற்சாலை, வாரியத்தின் இசைவினைப் பெற்றுள்ளது. தொழிற்சாலைக் கழிவுநீர், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திகரிக்கப்பட்டு, சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் பவானி ஆற்றில் விடப்படுகிறது. சுத்திகரிப்பு நிலையத்தில் கீழ்க்கண்ட அமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன :.

1. கழிவுநீர் சமப்படுத்தும் தொட்டி
2. ஃப்ளாஷ் மிக்ஸர்
3. கரைந்துள்ள காற்று மிதவைத் தொட்டி
4. எரிப்பான்

சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரின் தரம், வாரிய தர நிர்ணய அளவுகோலுக்குட்பட்டுள்ளதா என்பது குறித்து 8-7-94 அன்று மாதிரி சோதனை செய்யப்பட்டது. இதில் PH, BOD, COD ஆகியவை வாரியம் நிர்ணயித்த தரத்தைவிட அதிகமாக இருந்தது. தரத்தை மேம்படுத்த ஒப்புக்கொண்டு இதற்கான கருத்துரு அனுப்ப இசைந்துள்ளார்கள்.

3. திருவாளர்கள் கே.ஜி. டெனிம் லிமிடெட், ஜடயாம்பாளையம்.

இத்தொழிற்சாலை 11-11-93 லிருந்து இயங்கி வருகிறது. இத்தொழிற்சாலை மாதம் ஒன்றுக்கு 682 டன்கள் "டெனிம்" துணி வகையை உற்பத்தி செய்து வருகிறது. உற்பத்தி செய்முறையில் நாளொன்றுக்கு 148 கி.லி. தொழிற்சாலைக் கழிவுநீரையும், 5 கி.லி. வடிகால் கழிவுநீரையும் வெளியேற்றுகிறது. தொழிற்சாலை வாரிய இசைவு பெற்றுள்ளது. விரிவாக்கத் திட்டத்திற்கு விண்ணப்பித்துள்ளது. தொழிற்சாலைக் கழிவுநீர் கீழ்க்கண்ட அமைப்புகளைக் கொண்ட முழுமையான அளவில் அமைக்கப்பட்டுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திகரிக்கப்பட்டு அவர்களது சொந்த நிலமான 7 ஹெக்டேர் நிலத்தில் பாய்ச்சப்படுகிறது:

1. கம்பி வலை
2. சமநிலைப்படுத்தும் தொட்டி
3. ஃப்ளாக்குலேட்டர்
4. தட்டு பிரிப்பான்
5. காற்றேற்றுத் தொட்டி
6. இரண்டாம் நிலை தெளியவைப்பான்
7. சேறு திடப்படுத்தும் கருவி
8. சேகரிக்கும் தொட்டி
9. சேறு உலர்த்தும் படுகை

TRUTH ALONE TRIUMPHS

1994 நவம்பர் 10] [திரு. ம. சின்னசாமி]

4. வீஜெலெட்சுமி என்ஜினியரிங் ஒர்க்ஸ் லிமிடெட் தொழிற்சாலை, தேக்கம்பட்டி

இத்தொழிற்சாலை கட்டி முடிக்கப்பட்டு சோதனை ஓட்டம் நடைபெற்று வருகிறது. இத்தொழிற்சாலை மாதம் ஒன்றுக்கு 18 டன்கள் மென்மையான நூலிற்கு சலவை செய்து சாயம் ஏற்றும் தொழில் முறையின்போது நாளொன்றுக்கு 150 கி.லி. தொழிற்சாலைக் கழிவுநீரும், 12 கி.லி. வடிகால் கழிவுநீரும் வெளியேற்ற வாரிய இசைவினைப் பெற்றுள்ளது. இத்தொழிற்சாலை பவானி ஆற்றிலிருந்து 2 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. இத் தொழிற்சாலை அதனது கழிவுநீரை சுத்திகரிக்க கீழ்க்கண்ட அமைப்புகளைக் கொண்ட சுத்திகரிப்பு நிலையத்தை முழுமையான அளவில் கட்டி முடித்துள்ளது :

1. சேகரித்து சமநிலைப்படுத்தும் தொட்டி
2. ஃப்ளாஷ் மிக்ஸர்
3. க்ளாரி ஃப்ளாக்குலேட்டர்
4. காற்றேற்றுத் தொட்டி
5. இரண்டாம் நிலை தெளியவைப்பான்
6. சேறு உலர்த்தும் படுகை
7. சூரிய வெப்பத்தில் ஆவியாக்கும் தொட்டி

சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை தனது சொந்த நிலமான 4 ஹெக்டேர் நிலத்தில் பாசனத்திற்குப் பயன்படுத்த தொழிற்சாலை உத்தேசித்துள்ளது.

இப்பொருள் சம்பந்தமாக பல்வேறு அரசியல் கட்சிகள் 5–11–94 அன்று போராட்டம் செய்யப் போவதாக அறிவித்தனர். கோவை மாவட்ட ஆட்சியர் பல்வேறு அரசியல் கட்சிகளுடனும், நுகர்வோர் மன்றப் பிரதிநிதிகளுடனும் 3–11–94 அன்று பேச்சு வார்த்தை நடத்தினார். அதன் இறுதியில் அவர்கள் 5–11–94 போராட்டத்தை தொடரப்போவதாக அறிவித்தனர். 5–11–94 அன்று பல்வேறு அரசியல் கட்சிகள், திருப்பூர், மேட்டுப்பாளையம் மற்றும் அவினாசி தாலுக்காக்களில் "பந்த்" நடத்தினர். கடைகள் மற்றும் சினிமா அரங்கங்கள் மூடப்பட்டிருந்தன. தொலைதூர (mofussil) பேருந்துகள் ஓடின. நகரப் பேருந்துகள் இயங்கவில்லை. போராட்டம் நடத்துவோர், தேக்கம்பட்டியிலுள்ள வீஜெலெட்சுமி என்ஜினீயரிங் வொர்க்ஸ், திருப்பூர் குடிநீர்த் திட்டப் பகுதியின் அருகில் அமைந்துள்ளதால் அது தொடர்ந்து நடப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

வாரிய நிபந்தனைகளை மீறும் தொழிற்சாலை மீது நீர் மாசுத் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு சட்டம் பிரிவு 33(அ)-வின் கீழ் நடவடிக்கை எடுக்க வாரியத்திற்கு அதிகாரம் உள்ளது. மேற்படி இயங்கிவரும் தொழிற்சாலைகள் வாரிய நிபந்தனைகளை மீறுவதாக அறியப்படும் பொழுது, சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும். வாரியம் நிலைமையை உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறது.

இந்நிலையில், பவானி ஆற்றங்கரைப் பகுதியில் அமைந்துள்ள சாயத் தொழிற்சாலைகள் வெளியேற்றும் கழிவுநீரால் குடிநீர்த் திட்டங்கள் ஏதும் பாதிக்கப்பட்டதாகக் கூற இயலாது.

செல்வி எல். சுலோசனா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வைத்த விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். பதிலுரையில் 4 தொழிற்சாலைகளைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. பவானி ஆற்றங்கரையோரம், குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்படும் பகுதிக்கு மேல் பகுதியில், இரசாயன சாயப் பட்டறைகள் அமைவதால், குடிநீர் மாசுபடும் என்று மக்கள் அச்சமுறுகின்றனர். கழிவுநீர் சுத்திகரிக்கப்பட்டாலும், முழு நச்சுத் தன்மை நீங்கிவிடும் என, மாசுக்கட்டுப்பாட்டு வாரியம்கூட உறுதியாகக் கூறவில்லை எனக் கூறப்படுகிறது. அரசாணையின்படியும் வாரியம் விதிக்கும் நிபந்தனைக்களுக்குட்பட்டும் செயல்படுவோம் என்று உறுதிகூறி தொழிற்சாலை தொடங்க அனுமதி பெற்று விடுகிறார்கள். நாளடைவில் ஆலை அதிபர்கள் அந்த நிபந்தனைகளைக் கடைப்பிடிக்காமல் கழிவுநீரை ஆற்றில் கலக்க விடுவார்களோ என்று பொதுமக்கள் அஞ்சுகின்றனர்.

குடிநீர்த் திட்டங்கள் செயல்படுகின்ற பவானி ஆற்றங்கரையோரம் அமைந்துள்ள இந்த ஆலைகளிலிருந்து வெளியேறும் இரசாயனம் கலந்த கழிவு நீரை ஆலைகளுக்குச் சொந்தமான பூமியில் பாய்ச்சினாலும் இதன் தாழ்வான பகுதியில் உள்ள பள்ளத்தில் கழிவுநீர் ஊற்று உருவாகி அந்நீர் அருகில் உள்ள பவானி ஆற்றில் கலக்க நேரிடும் என்றும், அதனால் 10 இலட்சம் மக்களின் உடல் நலம் பாதிக்கப்படும் என்றும் மக்களிடையே ஒரு அச்ச உணர்வு ஏற்பட்டுள்ளது. மேலும் நிலத்தடி நீர் மாசுபட்டு அதனால் விவசாயம் பாதிக்கக்கூடிய நிலைமையும் ஏற்படும் வாய்ப்பும் உள்ளது. (மணியடிக்கப் பெற்றது)

1994 நவம்பர் 10]

முற்பகல் 11–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்விதான் கேட்க வேண்டும். அமைச்சர் வைத்திருக்கிற அறிக்கையின் பேரில் ஒரு கேள்வி மட்டும்தான் கேட்க வேண்டும்.

செல்வி எல். சுலோசனா: பேரவைத் தலைவர் அவர்களே, பல ஆண்டுகள் முடங்கிக் கிடந்த குடிநீர்த் திட்டப் பணிகள், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகுதான் முடுக்கிவிடப்பட்டு, கடந்த ஆண்டு முதல் திருப்பூர் 2-வது குடிநீர்த் திட்டம் செயல்பட்டு வருகிறது. அதேபோல் என்னுடைய தொகுதியில் உள்ள காரமடை குடிநீர்த் திட்டம், தேக்கப்பட்டி குடிநீர்த் திட்டம் ஆகியவை முடியும் தருவாயில் இருக்கின்றன. விரைவில் குடிநீர் வழங்க உள்ளார்கள். நான் இந்த சட்டசபையிலே முதன்முறையாகப் பேசியபோது (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் கொடுத்திருக்கிற அறிக்கையிலே உங்களுக்கு என்ன விளக்கம் வேண்டுமோ அதை மட்டும் கேளுங்கள். நீங்கள் சட்டமன்றத்திலே முதலில் பேசியதிலேயிருந்து விவரமாக இப்போது பேசிக்கொண்டிருந்தால் எப்படி? இன்னும் 5 உறுப்பினர்கள் கேள்வி கேட்க வேண்டும்.

செல்வி எல். சுலோசனா: அம்மாவின் ஆட்சியில் செய்திருப்பதைப் பேசுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது பேச முடியாது. விதி 55–ல் ஒரு சிறு விளக்கம் தான் கேட்கலாம். உங்களுக்கு என்ன விளக்கம் வேண்டும், அதை மட்டும் கேளுங்கள்.

செல்வி எல். சுலோசனா: பேரவைத் தலைவர் அவர்களே, பவானி நதி மாசுபடாமல் பாதுகாக்க பவானி பாதுகாப்புக் குழுமம் என்ற ஒன்றை அமைக்க மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு வேண்டுதல் சமர்ப்பிக்கின்றேன். குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தும் பகுதியில் இரசாயனம் மற்றும் சலவை சம்பந்தமான தொழிற்சாலைகள் அமையக் கூடாது என்று அரசு புதிய ஆணை பிறப்பித்து, காக்கும் தெய்வமாக விளங்கும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க பணிந்து கேட்டுக் கொள்கிறேன். இது குறித்து அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகின்றேன்.

[1994 நவம்பர் 10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம் பகுதியில் 3 சாயத் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. ஒரு தொழிற்சாலை கட்டி முடிக்கப்பட்டு சோதனை ஓட்டம் செய்ய ஆரம்பித்துள்ளது. அரசு ஆணை எண் 213, சுற்றுப்புறச்சூழல் மற்றும் வனத் துறை நாள் 30-3-1989-ன்படி இந்த ஆலைகளுக்கு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் மூலம் ஆரம்ப அனுமதி 'இன்ஷியல் கிளியரன்ஸ்' வழங்கப்பட்டிருக்கிறது. இந்த ஆலைகளிலிருந்து வெளிவரும் கழிவுநீர் காரணமாக அங்கு இருக்கிற குடிநீர் நிலைகள் பாதிக்கப்படும் என்று பொதுமக்கள் அரசுக்கு உணர்த்துகின்ற வகையில் ஒரு போராட்டத்தை 10 நாட்களுக்கு முன்பு அங்கே தொடங்கி இருக்கின்றார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர், அவர்களை எல்லாம் அழைத்துப் பேசியிருக்கிறார்கள். மேலும் இந்த ஆலைகளிலிருந்து வெளிவரும் கழிவுநீர் காரணமாக குடிநீர் நிலைகள் பாதிக்கப்படும் என்கிற நிலையை அரசு நன்றாக உணர்ந்திருக்கிறது. மக்கள் பிரதிநிதிகளாக இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் 5 பேர் இந்தப் பிரச்சினை குறித்து அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே, எல்லோரும் தனித்தனியாகக் கேள்வி கேட்க வேண்டாம். நான் ஒரே பதிலாகச் சொல்லி விடுகிறேன். இந்தத் தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் கழிவுநீர் காரணமாக குடிநீர் நிலைகள் பாதிக்கப்படும் என்று அரசு உணர்ந்திருக்கிற காரணத்தினால் மாசுக் கட்டுப்பாட்டு வாரியச் சட்டம் 33-(அ)-ன் கீழ் நடவடிக்கை எடுத்து அந்தத் தொழிற்சாலைகளை மூடுவதற்கு......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அமைதியாக இருக்க வேண்டும். தொழில் துறை அமைச்சர் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார். நீங்கள் அவரை அடிக்கடி இடையூறு செய்யாதீர்கள் (குறுக்கீடு)

திரு. ச. அழகிரி : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரின் கவனத்தை அவர் திசை திருப்புகிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அழகிரி செய்வதைப் போல அவை நடவடிக்கைகளுக்கு அவர் குந்தகம் செய்யவில்லை. திரு. அழகிரி செய்வது அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் ஏற்படுத்துவது. அமைச்சர் செய்வது அப்படியில்லை. அமைச்சரின் கவனம் திசை

1994 நவம்பர் 10] [பேரவைத் தலைவர்]

திரும்ப வேண்டாம் என்பதற்காகத்தான் சொல்லுகிறேன். (குறுக்கீடு) அவர்கள் செய்வதை விட நீங்கள் அதிகமாகத்தான் செய்கிறீர்கள்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, மாசுக் கட்டுப்பாட்டு வாரியச் சட்டப் பிரிவு 33(அ)ன் கீழ் நடவடிக்கை எடுத்து அந்தத் தொழிற்சாலைகளை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டுமென்று அதன் தொழிலதிபர்கள் அறிவுறுத்தப்படுவார்கள். அந்தத் தொழிற்சாலைகள் இனிமேல் இயங்காமல் இருப்பதற்கு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் இன்று முதல் உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வெ. பழனிசாமி.

திரு. வெ. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் கூறியுள்ளபடியும், குடிநீர் நிலைகள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கும் அந்தத் தொழிற்சாலைகளை மூடுவதற்கு உண்டான நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்ததற்காக, சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில், 3 சட்டமன்றத் தொகுதிகளின் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு நான் மீண்டும் ஒரு வினாவை வைக்க விரும்புகிறேன். ஏற்கெனவே ஒரு கிலோ மீட்டர் என்ற அளவிலே கொடுக்கலாம் என்று இருப்பதை தற்போது கோவை விவசாயப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றி வரும் சுற்றுப்புறச் சூழல் மற்றும் நிலத்தடி நீர் பேராசிரியர் திரு. உபிலிசாமி அவர்கள் 5 கி.மீ. தொலைவிற்கு அப்பால் அமைத்தால்தான் அங்கே மாசு ஏற்படாது என்கிற ஆய்வு நடத்திக் காட்டியிருக்கிறார்கள். ஆகவே, இது முழுமையாக 10 இலட்சம் மக்கள் குடிக்கின்ற தண்ணீராக இருக்கின்ற காரணத்தால் எந்தவகையிலேயும் மாசு ஏற்படாதவாறு தடுக்கக்கூடிய நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம். 1983–லே ஆரம்பித்த இந்தத் திட்டம்–1993–லே குடிநீர் தந்த இதய தெய்வம் புரட்சித் தலைவி ஆட்சியில் மூன்று தொகுதியிலும் இன்றைக்கு நிரந்தரமாக குடிநீர்த் தட்டுப்பாடு போக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தப் பிரச்சினை மூலமாக மாசு ஏற்பட்டுவிடுமோ என்ற ஐயப்பாட்டைப் போக்குகின்ற வகையில் அரசு நல்ல முடிவை அறிவித்திருப்பதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு நிரந்தரமாக அந்தப் பகுதியில் மேற்கொண்டும் பல தொழிற்சாலைகள் அமைப்பதற்கு முயற்சிகள் எடுத்துக்கொண்டு வருகிறார்கள். அதை நிரந்தரமாக தடையுத்தரவு மூலமாக நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[1994 நவம்பர் 10

முற்பகல் 11–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது கேள்வியில்லை. டாக்டர் மு. சீனியம்மாள்.

டாக்டர் மு. சீனியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுநாளைய கோரிக்கையாக இருந்த இரண்டாவது குடிநீர்த் திட்டத்தைக் கொண்டுவந்து அதன்மூலமாக நீராதாரமே இல்லாத மேட்டுப்பாளையம், அவிநாசி மற்றும் திருப்பூர் தொகுதிகளில் இருக்கின்ற 10 இலட்சம் மக்கள் தாகத்தைத் தீர்க்கின்ற வகையிலே தமிழகத்தின் முதல்வர் அவர்கள் சிறப்பான ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் கெமிக்கல்ஸ் கலந்த நச்சுத் தன்மையுள்ள தண்ணீரை அருந்துவதால் உடல்நிலையில் பாதிப்பு ஏற்பட்டு, மக்கள் அவதிப்படுகின்ற சூழ்நிலை காரணமாக ஒட்டுமொத்தமாக 10 இலட்சம் மக்களின் உணர்வுகளைப் புரிந்து, இந்த நல்ல ஆட்சியில் நல்ல முடிவை ஏற்படுத்திக் கொடுத்தமைக்காக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், நமது தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பாக நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு, இதன் மூலம் எதிர்க் கட்சிக்காரர்கள் இந்த அரசுக்குக் கெட்ட பெயர் ஏற்படுத்த வேண்டுமென்று ஒரு முடிவை எடுத்து, தமிழக முதல்வர் நடவடிக்கை எடுப்பதற்குத் தயாராக இருந்தும், அதை அறிவிப்பதற்கு சில நாட்கள் கூட அவகாசம் தராமல் ஸ்டிரைக் போன்றவற்றை ஏற்படுத்தி அதன் மூலம் இந்த அரசுக்குக் குந்தகம் விளைவிக்க எண்ணியவர்களின் எண்ணங்களை தூள்தூளாக்கிய தமிழகத்தினுடைய ஒரே தலைவி தமிழகத்தின் நிரந்தரமான முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்தான் என்பதை நிருபித்துக் காட்டியதற்கு தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்து அமைகிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கின்ற போது அறிக்கையில் இருப்பதைவிட அரசினுடைய சட்டத்தில் 33(அ) சட்டமாக இயற்றி இனிமேல் அப்படிப்பட்ட கம்பெனிகள் அங்கு ஏற்படுவதற்கும், அப்படி ஏற்படுத்தப்பட்டுள்ள கம்பெனிகளையே வேறு இடத்திற்கு மாற்றுவதற்கும் அறிவுறுத்துவதாகக் கூறியதற்காக கோவை மாவட்ட அனைத்து மக்கள் சார்பாக அவருக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து, அந்தப் பகுதியில் குடிநீராகப் பயன்படுத்தப்படுகின்ற முக்கிய ஆறாக அது இருக்கின்ற காரணத்தினால்

அந்தப் பகுதியில் இதுபோல் கம்பெனிகள் இனிமேல் யாரும் கட்டுவதற்கு அனுமதி வழங்குகின்றபோது, அதை 5 கிலோ மீட்டர் தொலைவில்தான் கட்ட வேண்டுமென்றும், இப்பொழுது நான்கு கம்பெனிகள் இருக்கின்றன, அதை அவர்கள் வேறு உபயோகத்திற்குப் பயன்படுத்திக்கொண்டு, சாயப் பட்டறைகளாக இருக்கின்ற இந்த டையிங் பேக்டரிகளை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கும், இப்பொழுது 6,7 கம்பெனிகள் அனுமதி கேட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் முன்பு எழுப்பப்பட்டுள்ளன. எம்.எல்.ஏ.-க்கள் வைத்த கோரிக்கையின் மூலமாக அந்தக் கம்பெனிகளைக்கூட 5 கிலோ மீட்டர் தூரத்தில் வேறு இடத்தில்தான் கட்ட வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பிக்குமா என்பதை அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது ஒரு கிலோ மீட்டர் என்ற தூரம்தான் விதியாக வைத்திருக்கிறோம். இந்த ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் இருப்பதால் இதுபோன்ற பிரச்சினைகள் இப்பொழுது ஏற்படுகின்ற காரணத்தால், எதிர்காலத்தில் தூரத்தைக் கூட்டுவது குறித்து அரசு விரைவில் ஒரு நல்ல முடிவை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். புதிய தொழிற்சாலைகள் நிச்சயமாக அந்தப் பகுதிகளிலே ஆரம்பிக்க அனுமதி வழங்கப்படமாட்டாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம், பவானி ஆற்றின் ஓரத்தில் இருக்கக்கூடிய சாயப் பட்டறைத் தொழிற்சாலையினுடைய கழிவு நீர் கலப்பது சம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினர்கள், அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள், விவரங்களை நம்முடைய மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். குறிப்பாக 1.5 கிலோ மீட்டர் தூரத்திலே இது அமைந்திருப்பதாகவும், இதன்மூலமாக சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் பவானி ஆற்றிலே கலக்கப்படவில்லையென்று விவர அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 5 கிலோ மீட்டருக்கு அப்பால் இனிமேல் இதுபோன்ற சாயத் தொழிற்சாலைகள் அனுமதிப்பதாகக் கூறினாலும்கூட, ஏற்கனவே இருக்கக்கூடிய ஆலைகளால் இன்றையதினத்திலே மாசு கலக்கப்படுகிறது. ஆகவே இதற்கு உடனடியாகத் தடை விதிக்கவேண்டும். தடை விதித்து, அந்தக் குடிநீரைப் பயன்படுத்தக்கூடிய மக்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதுதான் சரியாக இருக்கும். அதற்குரிய நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

[1994 நவம்பர் 10

முற்பகல் 11–55

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பதில் சொல்லும்போது திரு. பழனிசாமி தன்னுடைய கவனத்தை வேறு எங்கோ திருப்பிக்கொண்டிருந்தார் என்று நினைக்கிறேன். நான் உறுதியாகச் சொல்லியிருக்கிறேன். தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் 33 (அ) பிரிவைப் பயன்படுத்தி இந்த ஆலை இயங்குவது இன்றுமுதல் நிறுத்தப்படும் என்பதை ஏற்கெனவே நான் தெரிவித்திருக்கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி: பேரவைத் தலைவர் அவர்களே....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் பதில் சொன்னார்களா, இல்லையா? (குறுக்கீடு) விவர அறிக்கையில் இல்லை என்றால், செல்வி சுலோசனா அவர்கள் கேட்டதற்குப் பதில் சொன்னார்கள் அல்லவா? (குறுக்கீடு) உங்களுடைய கவனமே இப்போது கொஞ்ச நாட்களாக ரொம்பவும் சிதைந்துபோய் இருக்கிறது. ரொம்பவும் சிதைந்து பலவாறாகப் போவதால் ஒருநிலைப்படுத்தி இருங்கள்.

(ஆ) வால்பாறை தாலுகா, காரமலை டீ மற்றும் புராடியூஸ் கம்பெனித் தோட்டத் தொழிலாளர்களுக்கு போனஸ் வழங்கப்படாததால் பாதிப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. டாக்டர் அ. ஸ்ரீதரன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வால்பாறை தாலுக்கா, காரமலை டீ மற்றும் புராடியூஸ் கம்பெனித் தோட்டத் தொழிலாளர்களுக்கு இந்த ஆண்டு போனஸ் வழங்கப் படாததால் தொழிலாளர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.